මොහාන් විජේවික්‍රම
மொஹான் விஜேவிக்ரம
Mohan Wijewickrama
නැගෙනහිර පළාත් ආණ්ඩුකාරවර
கிழக்கு மாகாண ஆளுநர்
Governor of the Eastern Province

எனது இல. G/EPC/A/Memo/14 07.05.2014

பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்
செயலாளர், கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்
செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு

## ஆளுநரின் விஞ்ஞாபன இலக்கம். 03/2014

### கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் சிங்கள/தமிழ் மொழி மூல விஞ்ஞான/ கணித ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்தோரை ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்தல்

கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரியர்களாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்ததன் காரணமாக நீண்ட காலமாக நிலவி வந்த கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் குறைந்துள்ள போதிலும் மிக முக்கிய பாடங்களான விஞ்ஞான/ கணித ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போதும் முடியாமல் போயுள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கிழக்கு மாகாண சபை கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்களை கோரி விஞ்ஞான/ கணித பட்டதாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அதற்கு போதுமான எண்ணிக்கையானோர் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பித்தோரில் தகைமைகளை பூர்த்தி செய்திருந்த அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவர்களுள் சிலர் பதவியினைப் பொறுப்பேற்கவில்லை. 2013ஆம் ஆண்டு இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டு பதவியினைப் பொறுப்பேற்காதோரின் எண்ணிக்கை 34 ஆகும். இவர்களுள் பெரும்பாலானோர் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகளாவர். அதேபோன்று மேலும் சிலர் கஷ்டப் பாடசாலைகளுக்காக வழங்கப்பட்ட நியமனத்தை பொறுப்பேற்று குறுகிய காலத்தினுள் வேறு தொழில்களைப் பெற்று கிழக்கு மாகாணத்தை விட்டுச் சென்றுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த விஞ்ஞான/ கணித பட்டதாரிகளும் தத்தமது ஊர்ப் பிரதேசங்களுக்கு இடமாற்றங்களை பெற்றுக் கொள்வதற்கே தொடராக முயற்சித்து வருகின்றனர்.

ආණ්ඩුකාර කාර්යාලය, ඕර්ස්හිල් පාර, ත්‍රිකුණාමලය
ஆளுநர் செயலகம், உவர் மலை வீதி, திருகோணமலை.
Governor's Secretariat, Orr's Hill Road, Trincomalee.

කාර්යාලය දුරකථන අංකය / அலுவலகத் தொலைபேசி / Office Telephone: 026-2222102
ෆැක්ස් / பக்ஸ் / Fax: 026-2222320
නිල නිවස / வதிவிடம் / Residence: 026-2220012

கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரி விஞ்ஞான/ கணித ஆசிரியர்களைக் கொண்டு இவ் வெற்றிடங்களை நிரப்புவதே இதற்கு மாற்று வழியாக காணப்படுகின்றது. எனினும் கடந்த நான்கு ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்திற்கு சிங்கள/தமிழ் மொழி மூல கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரி விஞ்ஞான/ கணித ஆசிரியர்கள் மிகக் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டுள்ளமை பின்வரும் அட்டவணை மூலம் தெளிவாகின்றது.

| ஆண்டு | விஞ்ஞானம் | | கணிதம் | |
|---|---|---|---|---|
| | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 2010 | - | 09 | 02 | - |
| 2011 | - | 08 | - | - |
| 2012 | 01 | 17 | - | 01 |
| 2013 | 05 | 09 | - | 06 |
| மொத்தம் | 06 | 43 | 02 | 07 |

எனவே, பட்டதாரிகளைக் கொண்டு அல்லது கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரி விஞ்ஞான/ கணித ஆசிரியர்களைக் கொண்டு மாகாணத்தின் கஷ்டப் பாடசாலைகளில் நிலவுகின்ற விஞ்ஞான/கணித ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்ப்பது பயனற்றதாகும்.

இந்த விஞ்ஞான/ கணித ஆசிரியர் வெற்றிடங்கள் காரணமாக பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை பாதிப்புக்குள்ளாவதாகவும், அதற்காக எவ்வாறான வேலைத் திட்டத்தினூடகவாவது ஆசிரியர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணத்தின் சமயத் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், பல்வேறு சமூக அமைப்புக்கள், அரசியல் பிரநிதிகள் போன்றோர் என்னிடமும் மாகாண கல்வி அமைச்சிடமும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனவே, கிழக்கு மாகாணத்தின் கஷ்டப் பாடசாலைகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்காக விஞ்ஞான/கணித பிரிவுகளில் க.பொ.த. உயர் தரத்தில் சிறப்பாக சித்தியடைந்த போதிலும் பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது கல்வியியல் கல்லூரிகளுக்கோ அனுமதி கிடைக்காதவர்களைக் கொண்டு இந்தக் கஷ்டப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற மாவட்டப் பாடசாலைகளில் மூன்று வருடங்களுள் விஞ்ஞான/கணித பிரிவுகளில் மேற்படி உயர் தரத்தில் பெறுபேறுகளை பெற்றவர்களில் இருந்து வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த மாவட்டத்திலோ அல்லது வலயத்திலோ விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் மூலமாக கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு இஸட் புள்ளியின் (Z-score) முன்னுரிமை அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். பல்கலைக்கழக அனுமதிக்கு போதிய

அளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் விண்ணப்பதாரியொருவர் இந்த ஆசிரிய உதவியாளர் பதவியினை பெற வேண்டுமாயின் தனக்குக் கிடைத்துள்ள ஆசிரிய உதவியாளர் பதவியினை கைவிட மாட்டேன் என சத்தியக் கடதாசியொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஆசிரிய உதவியாளர்கள் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப வெற்றிடம் நிலவுகின்ற பாடசாலைக்கு நேரடியாக இணைக்கப்படுவர். அவர்களது சேவைக்காக 6000/= ரூபா கொடுப்பனவொன்றும் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரயாண மற்றும் தங்குமிடச் செலவுக் கொடுப்பனவொன்றும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு ஐந்து வருட காலப் பகுதியினுள் அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றை பெற வேண்டும் என்பதோடு பட்டம் செயல்வலுப் பெறும் தினத்திலிருந்து இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3-I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர். எவ்வாறெனினும், தான் ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்ற பாடத்தினை தொடராக கற்பித்தல் வேண்டும். அந்தப் பாடத்தினை மாற்றுவதற்கு எந்த வகையிலும் அனுமதிக்கப்பட மாட்டாது.

நியமனம் பெறும் ஆசிரிய உதவியாளர்கள் தொடர்பில் நெருங்கிய மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டு அவ்வப்போது விஷேட அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுவதோடு ஏதேனும் ஒரு வகையில் ஒழுக்கத்திற்கு முரணான நடவடிக்கை சம்பந்தமாகவோ அல்லது கற்பித்தல் சம்பந்தமான வினைத்திறன் இன்மை சம்பந்தமாகவோ அறிக்கையிடப்படுமாயின் விசாரணையின் பின்னர் இந்த ஆசிரிய உதவியாளர் நியமனம் உடனடியாக முடிவுறுத்தப்படும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உயர்தரத்தில் சித்தி பெற்றோருக்கு தமது விருப்பத்தின் அடிப்படையில் ஊர்ப் பிரதேச பாடசாலையிலேயே நியமனம் கிடைப்பதனால் நீண்ட காலம் அங்கு சேவையாற்றுவர். எனவே தற்போது இந்த மாகாணத்தில் சிங்கள/தமிழ் மொழி மூல விஞ்ஞான/ கணித ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்குமென நம்புகின்றேன்.

மேலும், இந்த முறையின் கீழான ஆட்சேர்பினை ஒரு முறை மாத்திரமே செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான ஆட்சேர்ப்புக்களை செய்ய வேண்டுமாயின் அவ்வாறான ஆட்சேர்ப்புகள் ஆளுநரின் அனுமதி பெறப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

மொஹான் விஜேவிக்ரம
ஆளுநர்
கிழக்கு மாகாணம்

MOHAN WIJEWICKRAMA
Governor
Eastern Province